# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 142 JAFFNA, FRIDAY, 25th JUNE, 1982 No. 26

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM



**Subscription**

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.


JDCSI

## Evangelistic Festival at Delft

The Evangelistic festival of the Vaddukoddai Evangelistic area comprising the Vaddukoddai, Pandaterruppu, Karainagar, Moolai, Araly, Pungudutivu, Velanai and Delft Churches was held at Delft on the 21st and 22nd of May. About seventy five persons went from the Churches outside Delft and arrived at Delft at 4.30 p. m. on the 21st. These persons were divided into three groups, each group visited the Christian homes and held Prayer meetings.

The main programmes commenced at 9.00 p. m. The high lights of the programme were a 'Kathaprasangam' conducted by Mr. S. Jebenesan and plays presented by the Youth of Delft and the members of the Delft Church, and the showing of a Video film. A special feature was a medical clinic conducted by Dr. Chandrapal for two full days.

A Holy Communion Service was conducted on the 22nd. The Celebrant was the Revd. S. Sugunanandhan and he was assisted by the Revds. T. S. Premarajah, S. Manobavan, and Chandran Arnold. Revd. J. C. Mather led the Prayer of Litany. Hospitality for all the participants was provided by Dr. Chandrabal, Messrs. Thiissarajah and Yogendran. The members of the Delft Church contributed their best to see that the festival was a success.

— Cor.

## Gospel meetings at Inuvil

A two days Gospel meetings organised by the Inuvil Church was held at Inuvil on the 12th and 13th of June 1982.

The days programme on the 12th commenced with a special Service for the members of the Hospital Staff. Rev. D. R. Ampalavanar conducted the Service. Bible studies for children was held at 4.30 p. m. Mrs. A. R. Thambiappah and Miss Vanitha Sinnathamby conducted the studies. A public meeting was held at 6.00 p. m., presided over by Mr. V. Rajkumar. The meeting commenced with a Prayer by Rev. N. W. G. Sugunarajah. Special songs were sung by the members of the Inuvil Choir. Rev. Sam Jeyatillekerajah was the Speaker. The days programme terminated with a play staged by the youth of the Navaly Church.

The programme on the 13th commenced with a Holy Communion Service, celebrated by Rev. N. W. G. Sugunarajah. A meeting for youth was held at 4.30 p. m. conducted by Rev. Sam Jeyatillakerajah. The public meeting held at 6.00 p. m. commenced with a Prayer by Mr. P. J. Suriyakumar. The meeting was addressed by Rev. Sam Jeyatilleke-rajah. The days programme terminated by the showing of a vedio film titled "Jesus of Nazreth" by Rev. R. Thurairajah.

— Cor.

## Human Rights Seminar in Sri Lanka

The first UN sponsored Human Rights Seminar for countries in the Economic and Social Commission for Asian and the Pacific Region (ESCAP) was inaugurated on 21-6-82 by President Jeyawardene at the Sri Lanka Foundation Institute.

Thirtyfive countries participated at the Seminar. The Leader of the Sri Lanka delegation was Mr. H. W. Jeyawardene, Q C. The main objective of this seminar will be to work out the initial steps for the creation of a Council for the promotion and protection of human rights in Arian countries.

The discussion of incidents of violations of human rights in Asian countries will not fall within the scope of this Seminar.

Human rights in Sri Lanka, according Mr. H. W. Jeyawardene, are protected by the Supreme Court. A more recent innovation is the "Ombudsman".

'Human rights' is not a mere declaration, said Mr. Jeyawardene. There should be institutions for the protections and promotion of human rights which includes obligations which the State owes to the people as food, shelter etc.

With this objective in view, "human rights" will be intro- as a subject in schools and universities in Sri Lanka by 1983.

The Seminar will continue till 2-7-82.

## Philatelists International

The Inaugural meeting of the Philatelists International was held on 10-6-82 at 121, 1st Cross Street, Jaffna and the following were appointed as office bearers:—

Mr. C. S. S. Muttucumaru (Notary Public, Sworn Translator and Director of A. C. S. Group Firms), President.

Mr. R. Kamalanathan (Attorney-at-law), Vice President.

Mr. B. A. Jebarajan (Insurance Agent), General Secretary.

Mr. T. Sooriakumar (Attorney-at-law), Treasurer.

Rev. W. R. Stephen (Evengilist), Publicity Officer.

A committee of six members was also appointed.

At the above meeting the President Mr. C. S. S. Muttucumaru said that the club should take immense measure to introduce the stamp collection among the student population to make them better citizens of Sri Lanka. By the stamp collection students are given the correct chance of learning about various countries world over.

— Cor.

## IN MEMORIAM

**Ariam Hudson Paramasamy**

(March 16th, 1975)

...... Christ shall be magnified in my body, whether it be by life, or by death. (phil. 1:20)

*We start on our journey*
*to Gods' promised land,*
*Where time is not counted*
*by days, months or years...*
*And in that Fair City*
*That God has prepared*
*Are unending joys*
*to be happily shared*
*With all of our loved ones*
*who patiently wait*
*On death's other side*
*to open "THE GATE"!*

(son Mahil and Family)

Remembered on Her BIRTHDAY JUNE 24.

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY

**Cyrus T. Ethirnayagam Mills**

Called to rest: 28th June 1978

*"In the sweet by and by*
*We shall meet on that*
*beautiful shore."*

Affectionately remembered by his loved ones.

"Green Villa",
Manipay.

## The Mahaweli Ballet

A modern Ballet, *Run Diawara* was staged at the BMICH on 21-6-82 under the patronage of the President and Mrs. Jeyawardene. The Ballet was performed by Somapala Mudunkotge and troupe. The music was by Victor Ratnayake, the well known composer and singer.

## The Sri Lankan 'Terrorists' in India

The 'Liberation Tiger Terrorist' leader Uma Maheswaran and Parabaharan and four others will be given quit notices, according to Indian law, if they had entered the country 'illegally' without valid travel documents, according to a high police official in India.

But the destination of the deportee is a matter that could not be decided by the Indian government. The Embassy of the country of origin of the deportee could restrict his travel.


## UDUVIL GIRLS' COLLEGE

**Wanted**

1. Science graduates to teach in the A/L classes.
2. A teacher for Shorthand, Typing.
3. Music Teacher (Carnatic) qualified to teach violin and vocal up to Grade: 5.

Preferably resident teachers.

Apply before 15-7-1982.

PRINCIPAL
Uduvil Girls' College,
Chunnakam.

## LAND FOR SALE

Navatkuli 32 Lcms close to National Housing Scheme, Railway Station and Kandy Road.

*Contact:*
T. THAMPAPILLAI,
55, Moor Road, Colombo — 6.

## Advertisement

There are vacancies in the Unified Mission Medical Service for Trainees in Dispensary/Laboratory Technology. Applicants should have passed the G. C. E. (O.L.) with credits in three Science subjects and be below 25 years of age. Preference for G. C. E. (A. L.) candidates.

Apply to the Medical Superintendent, Green Memorial Hospital Manipay, on or before 15-7-82.

## Advertisement

There is a vacancy for an Overseer in the Unified Mission Medical Service. Preference for G. C. E. (O. L.) candidate with experience in check roll work and labour management. Knowledge of building management and electrical work would be added advantage.

Apply to the Medical Superintendent, Green Memorial Hospital, Manipay on or before 15-7-82.


## IN MEMORIAM

**Mrs. Pakiaratnam Mather**

nee (Curtis)

Departed 28th June 1963

Ever remembered by her loved one's in Sri Lanka and outside, with deep gratitude to God, for her selfless services and noble ways.

5, Nimal Road,
Bambalapitiya.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 142 ] 25 — 6 — 1982 [ இதழ் 26

## மெதடிஸ்த திருநாள்

ஜூன் 29-ந் திகதி மெதடிஸ்த திருச்சபையின் நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. மெதடிஸ்த திருச்சபை ஜோன் வெஸ்லி என்னும் பக்தனின் சீரிய தொண்டினால் இங்கிலாந்தில் முகிழ்த்தது அப்பொழுது ஜோன் வெஸ்லியினதும் அவர்களினது சகாக்களினதும் பக்தி வாழ்க்கை அவரையொத்த வாலிபர்களினால் எள்ளி நகையாடப்பட்டது. அவர்களை "மெதடிஸ்துகள்" என்று கேலி செய்தனர் அந்தக் கேலிப் பெயரே அந்த மகாவீர தியாகிகளின் இயக்கத்தின் பெயராக அமைந்துவிட்டது. 1738-ம் ஆண்டில் சார்ல்ஸ் வெஸ்லியும் அவரைத் தொடர்ந்து அவரது சகோதரர் ஜோன் வெஸ்லியும் இயேசுக் கிறிஸ்துவினால் பாவ மன்னிப்புப் பெற்ற அனுபவத்தை அடைந்தனர் அன்று தொடக்கம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து இயேசுக்கிறிஸ்துவின் அன்பை எடுத்துப் போதித்தார்கள் அப்பொழுது இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி, இங்கிலாந்தின் சமூக அமைப்பையே மாற்றிக்கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கைத்தொழிற் புரட்சியின் வேகத்தைச் சமாளிக்கமுடியாமல் தமது சொத்துக்களையெல்லாம் பணமுதலைகட்கு விற்றுவிட்டுத் தொழிற்சாலைகளில் தொழிலாளிகளாயினர். நோயும் வறுமையும் அடக்குமுறையும் அவர்களை வாட்டின அந்த மக்களிடத்திற்கு ஜோன் வெஸ்லி போனார் "தலை நிமிர்த்தி பெருமையுடன் நில்லுங்கள், நீங்கள் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள்" என்று கூறினார் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர், ஆனந்தக் கண்ணீராயிற்று. ஏழைத் தொழிலாளிகள் தமக்காகவும் சருவேசன் உயிரைவிட்டார் என்று உணர்ந்து பெருமிதமடைந்தனர். மெதடிஸ்த ஊழியர்களின் அருமுயற்சியினால் இங்கிலாந்தில் மாக்ஸியப் புரட்சி ஏற்படவில்லையென்று துணிந்து கூறலாம்.

திருச்சபை விஷயங்களைக் குறித்து நிர்விசாரிகளாய் இருந்த மக்கள் மத்தியில் பக்தியும், நம்பிக்கையும் பெருக்கெடுத்தோடின.

இங்கிலாந்தில் பரவிய மெதடிஸ்த செய்தி உலகமெங்கணும் பரவ வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இதனூற்றன் மெதடிஸ்த மிஷனரி சங்கம் உதயமானது. இந்த மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார். 1814-ம் ஆண்டிலேயே இந்த நற்செய்தித் தொண்டர்கள் இலங்கையிற் பணியாற்றத் தொடங்கிவிட்டனர். அன்றுதொட்டு இன்றுவரை அணியணியாகப் பல மெதடிஸ்த தொண்டர்கள் இலங்கையிலே பணியாற்ற வந்தனர்

யாழ்ப்பாணத்தில் இன்றும், மிடில்ரன் வீவர், ஸ்கோகுறப்ட், பீற்றர் பெர்சிவல், காஷ், சிமித் போன்ற மெதடிஸ்த மாமலைகளின் பெயர்கள் மிகுந்த மரியாதையுடன் குறிப்பிடப்படுகின்றன.

மெதடிஸ்த திருச்சபையின் பணி மேலும் சிறக்க உதயதாரகையும் தனது வாழ்த்தைத் தெரிவிக்கிறது

---

## செய்திகள்

### புதிய பஸ் வண்டி இறக்குமதி

இலங்கைப் போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் சேவைகளும் உபயோகத்திற்கு வைத்திருக்கும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை நாட்டின் தேவைக்குப் போதியதல்ல வென்ற காரணத்தால் புதிய வண்டிகளை இறக்குமதி செய்வதை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் பஸ் வண்டிகளுக்கு விலை தணிப்புக் கிணையான வரிச் சலுகை கொடுக்க முன்வந்துள்ளது. தனியார் வாகனங்கள் குறிக்கப்பட்ட அளவுக்கும் பத்து வீதம் மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்லலாம் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்காகும். எனினும் போதிய வாகனங்கள் இல்லாமையால் ஒவ்வொரு வாகனமும் மேலதிகமாக ஏற்றிச் செல்லும் பிரயாணிகள் தொகை மிகவும் அதிகமாகும். இந்தக் குறைபாட்டை நீக்குவதற்காகவே அரசாங்கம் இந்தச் சலுகையை வழங்கத் தீர்மானித்துள்ளது.

தனியார் போக்குவரத்துச் சேவைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்பாடான முறையில் அவற்றை நடைபெறச் செய்யவும் வேண்டிய சட்டப் பிரமாணங்களைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### பிழையற்ற வேதாகமம்

சில வாரங்களுக்குமுன் அமெரிக்காவின் சான் டீகோ நகரில் மாபெரும் மகாநாடு ஒன்று கூடியது. 45 மாநிலங்களைச் சேர்ந்த குருமாரும் அதிட்சதருமாகச் சுமார் 2500 பேர் வேதாகமம் எந்த வகையிலும் பிழையற்றது என்ற கொள்கையை உறுதிப்படுத்தவும், நாளாந்த வாழ்க்கையில் வேதாகமம் என்ன பங்கை எடுக்க வேண்டும் என்பதைத் திட்டம் பண்ணவும் இந்த மகாநாட்டிற் கூடினர். நாலு நாள் வரை நடந்த இம் மகாநாட்டின் இறுதியில், மக்கள் தங்களுக்கிடையிலான மனிதத் தொடர்புகளுக்கும், ஜனன மருத்துவம் சார்ந்த அறிவியலுக்கும், தொழில் முகாமைப் பிரச்சனைகளுக்கும், வறுமை நிவாரணக் கேள்விகளுக்கும் வேதாகமம் காட்டும் வழிகளையே ஆதாரமாக்கிக்கொள்ள வேண்டுமென உறுதிப்படுத்தப்பட்டது.

வேதாகமத்தின் பிழையின்மை சாதிக்கும் சர்வதேசச் சங்கம் 1977-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு இயக்கத்தினரால் இந்த மகாநாடு கூட்டப்பட்டது.

## நற்செய்திப் பணி வாரம் — உடுவில் வட்டாரம்

சென்ற மே மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமான ஆதின நற்செய்திப் பணி வாரத்தையொட்டிப் பல விசேட நிகழ்ச்சிகள் உடுவில் வட்டாரச் சபைகளில் நடைபெற்றன. இந்த வட்டாரத்தைச் சேர்ந்த சபைகள் உடுவில், இணுவில், மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சங்கானை, அளவெட்டி, சண்டிலிப்பாய் ஆகும். இந்தச் சபைகளினால் நற்செய்திப் பணி மல்வத்தை, கல்லாக் கட்டுவன், இணுவில் தொழிலாளர் வதிவிடம் தன்னை, அட்டகிரி, ஆனைக்கோட்டை, நவாலிமேற்கு, சங்கரத்தை — சித்தன்கேணிப் பகுதி ஆகிய இடங்களில் நற்செய்திப் பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எல்லாச் சபைகளிலும் சிறப்பு நற்செய்திப் பணி வழிபாடுகள் நடத்தப்பட்டன விசேட நற்செய்திப்பணி திங்கட்கிழமை இணுவில், ஆனைக்கோட்டையிலும், செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை முறையே மானிப்பாய், மல்வத்தை (சத்தியபுரம்), சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன. இவற்றில் வட்டாரத்துச் சபைகளைச் சேர்ந்த பலர் வீடுகளில் சந்தித்துக் கிறிஸ்தவர்களல்லாதவரோடு பேசியும் துண்டுப் பிரசுரங்களும் வேதாகமப் பகுதிகளும் விநியோகித்தும் சுவிசேடக் கூட்டங்கள் நடத்தியும் வந்தனர்

சனிக்கிழமை 22 ஆம் திகதியன்று வட்டார நற்செய்திப் பணி விழா நவாலித் தேவாலயத்தில் நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு ஆரம்ப ஆராதனை செல்வி ஆனந்தி கந்தசாமியினால் நடத்தப்பட்டது, வேதப் பாடங்கள் உலகநாதன் செல்லையா, யோகநாதன் செல்லையா ஆகியோரினால் வாசிக்கப் பட்டன. கனம் Sam தம்பு அவர்கள் அருளுரை வழங்கினார்கள். சுவிசேஷ நிலையங்கள் சிறுவர் இல்லங்களின் பிள்ளைகள் உட்பட 150 பிள்ளைகளும் சுமார் 100 வளர்ந்தோரும் சமுகமாயிருந்தனர்.

ஆராதனையைத் தொடர்ந்து பிள்ளைகளுக்கான பேச்சு, மனன வசனப் போட்டிகள் இடம் பெற்றன. மதிய போசனத்தின் பின் பாட்டுகள், நடனங்கள், கோலாட்டம், சிறு நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் அருள்மனை, அளவெட்டி, சத்தியபுரம், சங்கானை, கல்லாக் கட்டுவன், மானிப்பாய்ப் பிள்ளைகளினாலும், "ஒரு மன மாற்றத்துக்கு ஒரு உயிர்ப்பலி" என்ற சிறப்பு நாடகம் நவாலிச் சபை வாலிபரினாலும் திருமதி F. S. அஸ்பெரி அம்மாளின் தலைமையில் அளிக்கப் பட்டன. எல்லா நிகழ்ச்சிகளும் மெச்சப்பட்டன.

பிள்ளைகளுக்கான போட்டிகளில் பின்வருவோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன:

சிரேஷ்ட பிரிவு — பேச்சு —
செல்வன் மதியாபரணம் சிவஞானம். செல்வி விமலராணி தம்பிராஜா.

கனிஷ்ட பிரிவு — பேச்சு —
செல்வி வினோதரஞ்சினி சிவஞானம், செல்வி சாந்தா அப்புத்துரை.

மனன வசனம் —
செல்வி வில்லிமலர் அருளப்பு.

பொதுப் போட்டி
செல்வி அருள்நாயகி அருளானந்தம், செல்வி ஜெஸ்மி கிருபைராஜா, செல்வி சுட்டி இராசரத்தினம், செல்வி M. தேவமலர், செல்வி டிலானி ஜெயகுமாரன், செல்வி K. பாக்கியராணி,

இந்த விழாவைச் சிறப்பிக்க நவாலி Y. M. C. A. ஸ்தாபனத்தாரும் நவாலிச் சபையினரும் கொடுத்த உதவிகள் பாராட்டுக்குரியன,

## மல்வினஸ் யுத்தம் ஓய்ந்தது

கடந்த சுமார் பத்து வாரக் காலமாக மல்வினஸ் எனப்பட்ட வோக்லன்ட்ஸ் தீவுகளில் ஆஜன்தீனப் படைகளுக்கும் பிரித்தானியப் படைகளுக்குமிடையே மும்முரமாய் வளர்ந்துகொண்டு வந்த யுத்தம் சென்ற செவ்வாய்க்கிழமையன்று முடிவடைந்தது. இந்த யுத்தத்தில் இருநாடுகளையும் சேர்ந்தவரான சுமார் ஆயிரம் யுத்த வீரர்கள் உயிரிழந்தனர். கப்பல்கள், விமானங்களின் சேதம் பெருமளவு நட்டத்தை இருநாடுகளுக்கும் ஏற்படுத்தியது. ஆஜந்தினாப் படை வீரரில் சுமார் 15,000 பேர் யுத்தக் கைதிகளாகப் பிரித்தானியப் படைகளிடம் சிக்கிக் கொண்டுள்ளனர் எனவும் செய்திகள் கூறுகின்றன

1976 ஆம் ஆண்டில் ஜனாதிபதி பெரன் ஆட்சியை முறியடித்து ஆஜந்தினா அரசைக் கைப்பற்றிய இராணுவ அரசாங்கம் இந்த யுத்தத் தோல்வியின் நிமித்தமாக மக்களின் எதிர்ப்பைக் காணத் தொடங்கிவிட்டது யுத்த நிறுத்தத்தின் செய்தியைக் கேட்டதும் உத்தியோகபூர்வமான செய்திகள் எதுவும் கொடுக்கப்படுமுன்னரே ஆயிரக்கணக்கான ஆஜந்தீன மக்கள் ஜனாதிபதி கல்தியேரின் அரண்மனைக்கு முன்பாகக் கூடிப் பெரிய ஆர்ப்பாட்டம் செய்யத்தொடங்கினர். காவற்படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் லாத்திக் கம்பு கொண்டடித்தும் கூட்டத்தைக் கலைத்தனர் என்றும் இதனால் ஏராளமானோர் காயமடைந்ததோடு அநேகர் கைது செய்யப்பட்டனரெனவும் கூறப்படுகிறது.

அரண்மனை முகப்பினின்று ஜனாதிபதி கல்தியேரி மக்களுக்கு யுத்த நிறுத்தம் பற்றி உரையாற்றுவதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதிலும் இந்த ஆர்ப்பாட்டத்தினிமித்தம் ஜனாதிபதி வெளிவரவில்லை. பதிலாக சற்று நேரம் கழித்து தொலைக்காட்சிச் சேவையில் உரை நிகழ்த்தி: "ஆஜந்தினா தமது உடைமையைத்தான் கேட்டது; அது நமக்கு உரியது; எப்போதுமே நமக்கு உரித்தாயிருக்கும்; ஏதோவொரு காலத்தில் அதைப் பெற்றே தீருவோம்" என்றனர் யுத்தம் தோல்வியில் முடிந்ததெனவோ, தமது படைகள் பிரித்தானியப் படைகளிடம் சரண் அடைந்தனவென்றோ அவர் தமது சுருக்கமான பேச்சில் கூறவில்லை.

இஃதிவ்வாறாக, பிரித்தானிய அடைந்த வெற்றி பிரித்தானிய மக்களைப் பெருமகிழ்ச்சிக்குள்ளாக்கியது. "பிரித்தானிய ஆட்சி எங்கெங்கே இருந்தாலும் அங்கங்கே அது முற்றும் முழுவதுமாய்ப் பேணிக் காக்கப் படுமெனச் சகல நாடுகளும் இத்தால் அறியட்டும்" எனக் குதூகலமான பிரதமர் திருமதி தாச்சர் தாம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறினார். தென் அத்திலாந்திக் பிரதேசத்தில் எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் ஆஜந்தினா எடுக்கமாட்டாது என உறுதி கூறும் வரை, கைதிகளாகவுள்ள 15,000 துருப்புகளில் உத்தியோகத்தர் உட்படப் பலர் கைதாகவே இருப்பார் எனப் பிரித்தானிய அரசாங்கம் கூறியுள்ளது.

# புனிதர் யோவான்

— சேலம் ஆர். மோகன்ராஜு —

'போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும்' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தவன், 'உம்முடைய ராஜ்யத்திலே என்னுடைய குமாரர்களாகிய இவர்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும்' என்று வியர்க்க வியர்க்கக் கூறி முடித்தாள்.

இயேசு அமைதியாக அவளை உற்றுப் பார்த்தார். அவளது அறியாமையைக் கண்டு அவருக்கு பரிவுதான் ஏற்பட்டது. 'என்ன மக்கள் இவர்கள்? எதைக் கேட்பது, எதை விடுவது, ஒன்றும் தெரியவில்லை.'

'ஆனால் அதற்காக அவர் இவர்களை உதாசீனப்படுத்தவோ உதறித்தள்ளவோ இல்லை. மாறாக, பக்குவமாக, இவைகளை முடிவு செய்வது தமது பிதாவின் காரியமேயன்றி தமது காரியமல்ல' என்பதை அவர்களுக்கு உணர்த்தினார்.

இந்தச் சலோமி அவரது தாய் மரியாளின் சகோதரி என்று ஒரு வரலாறு கூறுகிறது. ஒருவேளை அந்தத் தைரியத்தில் கேட்டுவிட்டாளோ என்னவோ!

ஒருவேளை சலோமியினால் இவ்விதம் 'சுயநலம்' என்கிற வட்டத்திற்குள்ளேயே சதாகாலப் பழகிவிடப்பட்ட யோவானுக்கும், பின்னர் அதே சுயநலக் கலப்புடனேயே எல்லாக் காரியங்களையும் அணுகுவது தவிர்க்க முடியாததாகப் போயிருந்திருக்க வேண்டும். அதே நிலையில்தான் சீடனாகவும் ஆனான்.

இயேசுவைப் பின்பற்றாதவன் எவனாவது இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டுவிட்டானா? இதோ ஓடுகிறான் யோவான், அவனைப் பார்த்து 'ஓகோ, எங்கள் இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்த நீ யார்!' என்று அவனை விரட்ட.

சமாரியா மக்கள் தங்களையும் இயேசுவையும் ஏற்றுக்கொள்ளவில்லையா, இதோ இருக்கிறான் யோவான், போதகரிடம் முண்டியடித்துக்கொண்டு வந்து, 'இவர்கள்மேல் அக்கினியை வருஷிக்கப் பண்ணும் போதகரே' என்று முறையிட.

யோவானது எண்ணமெல்லாம், 'வைராக்கியம், ஆத்திரம் என்ற உணர்ச்சிகளின் சுழற்சி' என்கிறார் எச். ஏ. பாப்லே. பின்னர் அவனது குணவியல்புகளை அறியாமலா அவ்விரு சகோதரர்களுக்கும் இயேசு 'இடி முழக்கம்' என்ற பொருள்படும் 'பொவனர்கேஸ்' என்ற பெயரைச் சூட்டியிருப்பார்?

ஆனால் இந்த இடிமுழக்க இளைஞனின் வெற்று வேகத்தையும், அதன் மையத்திலிருக்கும் சுயநல மனப்பான்மையையும் இயேசு அறியாதவரல்ல. அவனது குழந்தைத்தனப் பதட்டம் இயேசு அறிந்திருந்த ஒரு பாடம். தமக்கு முன்னே விரித்துவைக்கப் பட்ட புத்தகமாக அவனது குணவியல்புகளை நன்கு படித்திருந்தார் இயேசு.

எனவே யோவானின் பதட்டமும், சுயநலமும் இயேசுவை என்றும் ஆட்கொண்டதில்லை. அவரது வலது பாரிசத்துக்கு ஆசைப்பட்ட அவனது பேராசையைக் கண்டு பிற சீடர்கள் எரிச்சலடைந்தார்கள். ஆனால் இயேசு எரிச்சலடையவில்லை.

அவர் எரிச்சலடைபவராயிருந்தால் அவரை ஏற்றுக்கொள்ளாத சமாரியா பற்றி எரிந்திருக்குமே! இயேசுவின் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்திய பக்தர்கள் சபிக்கப்பட்டிருப்பார்களே!

இதைப் பாருங்கள். இயேசு அவனது இயல்பை நன்கு அறிந்திருக்காவிடில் தமது 'அன்பான சீடனாக' அவனைத் தெரிந்துகொண்டிருப்பாரா?

அல்லது அவரது கடைசி விருந்தில்தான் அவனைத் தம் மார்பில் உரிமையோடு சாய்ந்துகொள்ள அனுமதித்து, 'யார் அவரைக் காட்டிக் கொடுப்பான்' என்ற அவனது கேள்விக்கு விடையையும் அளித்திருப்பாரா?

அல்லது தாம் மூத்த மகனாகப் பிறந்ததனால் உலகப் பிரகாரமாகத் தனது தாய்க்கு நிறைவேற்ற வேண்டிய கடமையையும் பொறுப்பையும், 'ஸ்திரீயே அதோ உன் மகன்' என்று குறிப்பாக அவனைக் காட்டிவிட்டுச் சென்றிருப்பாரா?

அவரது அன்பின் சீடனாக அவன் இராவிட்டால், மூன்றும் நாளிலே எல்லோரையும் முந்திக்கொண்டு அவன் ஓடி, கல்லறையின் வாசலிலே குனிந்து 'இயேசுவின் உயிர்த்தெழுதலை நிச்சயமாக்கிக்கொண்ட முதல் சீடன்' என்ற பெயரைப் பெற்றிருப்பானா?

ஆமாம். இயேசுவின் 'அன்பான சீடனா'கும்படி யோவான் தன் சுயநலத்தை இறுதியில் வென்றேவிட்டான். எந்த அளவுக்குத் தெரியுமா? தான் எழுதியுள்ள சுவிசேடத்தில் தன் பெயரை ஒருமுறைகூடக் குறிப்பிட்டுக்கொள்ளாத அளவுக்குப் பெருந்தன்மையின் சின்னமாக மாறிவிட்டான்.

பேதுருவுடன் சென்று ஆலய வாசலிலிருந்த பிறவிச் சப்பாணியை சுகப்படுத்தி இயேசுவைப் போல் ஊழியம் செய்யும் அளவுக்குப் பொதுநலத் தொண்டனாக மாறிவிட்டான். அவன் எழுதின சுவிசேடம் இருக்கிறதே, அதனை வேத வல்லுனர்கள் ஒருமிக்கப் புகழுகிறார்கள். ஆமாம், அச்சுவிசேடத்தில் அவன் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ள இயேசுவின் ஜீவியமும், பல இலக்கிய வல்லுநர்களால் புகழப்படும்படி அற்புதமாகக் கையாண்டுள்ள உருவக அணியும், அருவியின் வேகத்துடன் 'நேர்முகக் கூற்றுக்களையே நுழைத்து எழுதியுள்ள அழகு நடையும். இயேசு வாழ்ந்த ஊர்களையும் சம்பவங்களையும் யூதர் பாரம்பரியங்களையும் தெள்ளென விளக்கியுள்ள பாங்கும் அவன் ஆற்றியுள்ள பணியின் உச்சங்கள்.

அவை மட்டுமா அவனது சிறப்புக்கள்? யவீரின் மகளை எழுப்பினபோது இயேசு தம்முடைய சீடர்களில் மூவரைத் தவிர மற்ற எல்லோரையும் அனுப்பிவிட்டபோது அவர் தெரிந்துகொண்ட மூவரில் இவன் ஒருவன் (மா. 5:37) என்பதும் பேதுருவின் மாமி குணமாக்கப் பட்டபோது. இயேசுவோடு கூட இருந்த நான்கு சீடர்களில் இவன் ஒருவன் (மா. 1;29) என்பதும், இயேசு தேவாலயத்தின் அழிவை முன்னறிவித்ததைத் தனிமையில் விளக்கினபோது அவருடன் இருந்த நால்வரில் இவன் ஒருவன் (மா. 13:3) என்பதும். கெத்சமனேயில் இயேசு வியாகுலப்பட்டபோது அவர் தம்முடன் கூட அழைத்துச் சென்ற மூன்று சீடர்களில் இவன் ஒருவன், (மத். 26.37) என்பதும், இயேசு மறுருபமடைந்தபோது அவர் தம்முடன் அழைத்துச் சென்ற மூன்று சீடர்களில் இவன் ஒருவன் (மத். 17:1 என்பதும் இவனது பிற சிறப்புக்களாகும்.

அதுமட்டுமல்ல 'நான் திரும்பி வருகிறவரைக்கும் இவன் இருக்கச் சித்தமானால் உனக்கென்ன?' என்று இயேசு இவனைக் குறிப்பிட்டதால் இவன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று சீடர்கள் நம்பினார்கள். இன்னும் இதை விசுவாசிக்கிற யூதர்களும் உண்டு.

இந்த பரிசுத்த யோவான் கி. பி. 104இல், ரோம இராயனாகிய திரிஜான் காலத்தில் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாக ஊழியம் செய்துகொண்டே மரித்தான். இவன் தன் சகோதரனுடன் மிக ஒற்றுமையாக வாழ்ந்த இவனது குணநலனை வரலாறு போற்றுகிறது.

இப்படியாக யோவான் தனது வாழ்க்கையைத் துவங்கிய விதம் நமக்கு ஓர் எச்சரிக்கையாக இருந்திருக்கவேண்டும். ஆனால் அவன் இயேசுவின் உறவினால் அதனை நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக மாற்றிக்கொண்டான். ஆமாம்!. அது இயேசுவின் உறவு செய்கிற அற்புதம். அது இன்றும் ஜீவிக்கிற இயேசு நம்மிடையே செய்யும் அற்புதங்களில் ஒன்று.

---

## செய்திகளின் சாரம்

### சிறிய தொலைக் காட்சி

யப்பானிலே யுள்ள கைக்கடிகார உற்பத்தி ஸ்தாபனம் ஒன்று சாதாரண அளவான ஒரு கைக்கடிகாரத்தோடு இணைக்கப்பட்டதான தொலைக்காட்சி பெறும் கருவியை உற்பத்தி செய்துள்ளது. சுமார் $1\frac{1}{4}$ அங்குல அளவான படத்தைத் தரும் இக்கருவி எல்லா அலை வரிசைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாம்.

* * *

### புற்று நோய் அகற்றுக

அமெரிக்க ஸ்தாபனமொன்று இரண்டு வருடக் காலமாய் நடத்திய சில ஆராய்ச்சிகளைக் கொண்டு புற்று நோய்க்கும் கொழுப்பு நிறைந்த சாப்பாட்டு வகைகளுக்கும் நெருங்கிய தொடர்புடையதாய்க் கண்டுள்ளது. புற்று நோயின் அபாயத்தைத் தணிக்கக் கொழுப்புப் பதார்த்தங்களைத் தவிர்த்து, கூடிய அளவிலான மரக்கறி, பழவகைகளையும் தானியங்களையும் சாப்பிட வேண்டுமென அது ஆலோசனை கூறுகிறது.

* * *

### சமாதானப் புனித யாத்திரை

பிரித்தானியாவையும் ஆஜந்தினாவையும் சமாதானப் பிரசாரம் கருதிச் சமீபத்தில் தரிசித்த பரிசுத்த பாப்பரசர் உடனடியாக ஜெனிவாவுக்குப் பிரயாணமானார். ஒரு பத்து மணித்தியால வேளைக்கிடையில் பத்துப் பிரசங்கங்களையும் உரைகளையும் நிகழ்த்திய பாப்பரசர் சமாதானமும் மனித உரிமைகளும் எந்தவகையிலாகிலும் பேணிக் காக்கப்படவேண்டுமென்று தமது எல்லாப் பேச்சுகளிலும் கோரிக்கை விடுத்தார்கள்.

---

## ஆட்கள்

ஆதீனத்தின் இறையியல் வேட்பாளராயிருந்த திரு E. P. சொலமன், திரு M. தேவதாசன் ஆகியோர் அரசரடியிலுள்ள தமிழ் நாடு இறையியல் கல்லூரிக்கும், திரு. G. D. ஆனந்தராஜன் பெங்களூர் இறையியற் கல்லூரிக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

* * *

யப்பானிய திருச்சபைகள் ஆரம்பித்திருக்கும் செயலாற்றும் அன்பு (Agape) சேவைத் திட்டம் அங்கவீனமுடையோர், சொந்த புத்திக் குறைவுடையோர் ஆகியோரின் சிகிச்சை, பராமரிப்பைச் சார்ந்ததாகும். இந்தத் திட்டத்திற் சேர்ந்து பயிற்சி பெறுவதற்காக யாழ். ஆதீனத்தைச் சேர்ந்த கனம் A. ஜெயக்குமாரன் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். சென்ற வாரம் இதற்காகப் பிரயாணமான கனம் ஜெயக்குமாரன் அவர்கள் சுமார் ஐந்து மாத காலம் இப்பயிற்சியில் செலவிடுவார்கள். இவர்கள் ஆதீனத்தினால் அங்கவீனருக்காக இணுவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "நம்பிக்கை இல்லம்" ஸ்தாபனத்தின் முகாமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

யாழ். ஆதீனத்தின் கீழ் கிளிநொச்சிச் சபையிற் கடமையாற்றி வரும் கனம் S. ஜெயநேசன் அவர்கள் எருசலேமில் நடத்தப்பட்டு வரும் சுற்றுலாக் கல்வித் தொடர் ஒன்றில் சேரும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் கல்வித் தொடர் சுமார் பத்து வார காலம் நீடிக்கும். வருகிற செப்டெம்பர் மாதம் முற்பகுதியில் இவர்கள் பிரயாணமாவார்கள்.

* * *

யாழ். அத்தியட்சாதீனத்தின் கீழ் காரைநகர்த் திருச்சபையின் குருவாகக் கடமையாற்றும் கனம் T. S. பிரேமராஜா அவர்கள் உயர் பட்டதாரிப் படிப்புகளை மேற்கொள்வதற்காக அமெரிக்காவிலுள்ள பிறின்ஸ்ரன் இறையியற் கழகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கிறிஸ்த சேவையில் Counselling என்ற ஆலோசனை அருளும் துறையில் ஒரு வருடக் காலம் தமது படிப்புக்களை நடத்தவுள்ள கனம் பிரேமராஜா வரும் செப்டெம்பர் மாதத்தில் அக்கழகத்தைச் சேர்ந்துகொள்ளுவார்கள். யாழ். ஆதீனத்தில் இப்பேர்ப்பட்ட ஆலோசனைத் துறையொன்றை உருவாக்குவது ஆதீனத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது

* * *

ஆசிய சபை ஒன்றிணைப்பு இயக்கம் வரும் அக்டோபர் மாதத்தில் கல்விமுறைகள் சம்பந்தமான ஆராய்ச்சி, பயிற்சித் தொடரொன்றை நடத்தவுள்ளது. இதில் பங்குபெறும்படி உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி C. V. செல்லையா அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். இப்பயிற்சித் தொடர் மூன்று வாரங்களுக்கு நடைபெறும்.

---

## அவதூறு

ஒருவன் தன் கடமையை விடாமல் செய்துகொண்டு மௌனமாயிருப்பதே பழிக்குச் சரியான பதிலாகும். — ஜெவில்

எதிரே இல்லாதவனைப் பற்றிப் புறங்கூறுவோன் பழி சொல்லி அவனுக்குத் தீங்கு செய்கிறான்; அந்தப் பழி உண்மையானதா என்று தெரியுமுன்பே அதை நட்புவோனும் குற்றவாளியே. — ஹிரோடோட்டஸ்.

EDITORIAL

## The Face of Contentment

There are 22,000 young people (19,000 girls and 3000 boys) between the ages of 18 and 20 in regular employment in the Free Trade Zone earning Rs. 20, a day.

This was disclosed at a 'Question and Answer' Session which the Director-General of the Greater Economic Commission had, with the *Majlis*, members of the Moors' Islamic Cultural Home.

In addition to the 22 000 youth in permanent employment, there are also some 40,000 who are in indirect employment earning Rs. 10 a day.

The FTZ, according to the Director General has, since its establishment four years ago, given a return of twice the money spent on it. (CDN 18-6-82).

The progress made has been adjudged so "phenomenal" that a number of even middle level West German companies have, according to the FTZ Director, decided to invest on eletronic projects at *Katunayake* because of "high wages in Germany".

'Cheap labour' in Sri Lanka has been a siren song which foreign entrepreneurs have always found it difficult to resist.

The result today is that production at FTZ at Katunayake has moved from garments to eletronics and from electronics to agriculture. 'Fine weather lost is never found again' runs on old adage.

But when the '*cheap labour*' (*of Rs. 20* per day and Rs. 10 per day) relate to Sri Lankan youth between the ages of 18 and 20, who are "the users of the future" of Sri Lanka, the problem assumes a grim dimension.

Charles Dickens, the Victorian Novelist who, in many of his novels, sought to avenge his own sordid and pathetic childhood, says in one of his novels that the feasting of the rich "causes a multiplication of orts which are the heirlooms of the poor".

Here in Sri Lanka, it is not 'orts' in the sense of fragments of food that are offered by foreign entrepreneurs to our famished children but 'orts' in the form of "fragments of jobs" which today appear to be the "heirlooms" of our unemployed youth in search of easy money in a country which paradoxically spends 200 million rupees a year on the Education of its children.

The reason for the very high school drop-out rate in our 9500 schools (some of them with high rise buildings in rural areas) employing some 24,000 teachers, can be traced to these 'orts' (fragments of jobs) which, perhaps, help many families to ward off the wolf from the door, but yet leave an emptiness in the minds of the young.

It is true that during 'the previous regime' controls of every kind did grate on our spirit. But today the country's new affluence concentrated on a few individuals and business establishments run by individuals, tends to blind us often to the deeper concerns of social justice.

From a Christian standpoint, man's fulfilment in every sphere lies in mutual responsibility for his fellows. This applies to the production of consumer goods too.

The words of Canon Selby in his book *Spirtuality of Monetarism* has today a potent relevance to contemporary Sri Lanka: —

"The production of consumer goods should primarily be designed to meet human needs and build up reciprocal relations of support. It cannot be the means of exploiting other people for private advantage"

---

Opinion

### Expatriate Experts

Is there any doubt that all thinking people in this country respond to the plea of a "Science Wallah" in regard to what he says about expatriate Sri Lankan scientists who want to spend the winter months in their homelands at the behest and with the blessings of the multinationals who control not merely the UNDP and many UN agencies but also the Foundations, Organisations, and even University Faculties, which have adopted these Sri Lankan scientists and pay them remuneration no Third World Country can afford to pay now or at any time in the future.

That if this scheme is adopted it is a sure way of driving out the remaining "resident scientists" in Sri Lanka to look for richer pastures elsewhere.

*Tribune* — 5-6-82.

### The Flood in Sri Lanka and its Aftermath

The flood-ravaged places in Sri Lanka (during the first week of June this year) are Ratnapura, Galle, Kalutura and Matara. Some of these were the very areas where communal riots in August 1981, left their worst scar.

In *Pathupane* in the Pelmadulla area, occupied mostly by Plantation workers, the homes of over a dozen people were buried in a massive earthslip. No survivors have been reported.

It is estimated that as many as 250,000 people have been affected by the floods. Nearly 1 million rupees has been disbursed for emergency expenditure to the Ratnapura, Galle, Matara and Kalutura Kachcheris.

The death toll in the floods is 14, most of whom were victims of the earthslips.

---

### Who is who of the CCA Presidium

The Christian Conference of Asia has *four* new Presidents who will serve for the coming quadrennium. They will serve till the Eighth Assembly which will be held in 1985.

*The Rev. Canon Alan Chan* an Anglican, is Lecturer in Pastoral Theology at Chung Chi Theological College, of the Chinese University of Hong Kong. He is parish minister among the poor fishermen of *Shatin*. He is a member of the WCC Central Committee. He is married and has two daughters.

*Miss Prasanna Kumari* (23) is from Shoranur, Kerala, South India. She is a member of the CSI and is involved in youth work in her Parish. She is a teacher in a Church school.

*Mr. Victor Oorjitham* is a Methodist layman from KulaLumpur. He is a practising lawyer and moderator of the CCA — URM Advisory Committee.

*Mrs. Jan Cormack* is a Presbyterian lay woman from New Zealand. She is a teacher and a member of the Executive Committee of the NCC in New Zealand. She is married and has three daughters.

---

## CSI Delegation to West Germany

Twelve representatives from the Church of South India, involved in various spheres of Mission work in their respective dioceses visited West Germany and a few neighbouring countries during April — May this year. It was a reciprocal visit. A twelve member delegation from *Pfalz* and *Baden* Groups of Protestant Churches in Germany had visited the CSI institutions and Churches during November - December 1981.

The visits were arranged by the Association of Churches and Missions in Western Germany in Stuggart (EMS) through the Exchange Programme between the Protestant Churches in West Germany and the Church of South India.

Mr. L. S. C. Canagasingham a nominee of the Bishop of the JDCSI was one of the members of the team.

A Report of the delegation to the *Pfalz Group* to which Mr. Canagasingham belonged, will be published in the columns of the Morning Star from 3-7-82.

### Press Council (Sri Lanka)

The present Council members have been re-appointed for another three year term from 14-6-82. The Members are: — Mr. J. W. Subasinghe (Chairman), Mr. Mohamed Hussain, M. Tennekone Wimalananda, Mr. K. B. Sugadasa, Mr. D. F. Kariakarana and Mr. K. D. Mendis.

Mr. Hussain will act as Chairman until the return of Mr. Subasinghe who is out of the island.

---

*Comment*

### Ceylon Scheme for Church Unity

What happened at the Colombo Diocesan Council in October 1981, *revealed much ignorance about the Ceylon Scheme for Church Unity and many failures among clergy and laity to study and understand discuss and gain light on the Scheme* where there were doubts and difficulties and above all the need for a great deal of true fellowship and good will despite any disagreement there may be.......

There is a clear and urgent need for a call to sustained Prayer for Church Unity in every parish, for much understanding of the theology and practices not only of the other uniting churches but also of our own, careful study of the Scheme under competent leadership *and above all possible help to prevent those who disagree from being disagreeable.*

[Italics are ours]

The Ceylon Churchman

(January — February 1982)

---

*In brief*

- *498 students* complained to the University Grants Commission that errors have been made in respect their admissions. Mr. D. G. Dayaratne, a former Secretary of the Ministry of Education was appointed to go into the complaints. According to a report from the Secretary to the Ministry of Higher Education, *Five* of the applicants were found to deserve admission. In respect of two of these candidates, their marks were increased on re-valuation. The other three candidates were found to have supplied wrong data in their applications and these errors were rectified and the students admitted.

- *The Ceylon Tobacco Company* has donated Rs. 10,000 to the Mayor of Jaffna for the re-equipment of the Jaffna Public Library.

- *The Minister of Justice* has recommended that the Department of Prisons be re-named Department of Corrections.

- *Eighteen Political Parties* in Sri Lanka have sought recognition under the Parliamentary Elections Act. The Parties now recognised are: — UNP, SLFP, TULF, CP, LSSP, MEP, FP, TC, and CWC (Political Wing).

- *A Select Committee of Parliament* of six, will probe into an allegation that six bags, presumably cash, had been delivered at the Rosmead Place Residence of former Prime Minister, Mrs. Bandaranayake.

- *The President* has announced that the Parliament will be dissolved in July 1983, at the end of its full term. The General Elections will be held within four months of the dissolution.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB/59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 25th June 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.